**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பழங்காலத்தில் கதைகள் எதன் மூலம் பரப்பப்பட்டன?
2. வீரமாமுனிவர் எழுதிய கதை எது?
3. விந்தன் தாமே சொந்தமாக நடத்திய இதழ் எது?
4. 'மோகமுள்' என்ற புதினத்தைப் படைத்தவர் யார்?
5. அண்ணாதுரை படைத்த நாடகம் ஒன்றினைக் கூறுக.
6. 'பிரதாப முதலியார் சரித்திரம்' நூலின் ஆசிரியர் யார்?
7. சாண்டில்யனின் நாவல்களில் ஒன்றினைக் கூறுக.
8. 'போரும் அமைதியும்' ஆசிரியர் யார்?

9. கரிசல் இலக்கியத் தந்தை யார்?
10. ஞானபீடப் பரிசு பெற்ற அகிலனின் நூல் எது?
11. 'ஊசியும் உணர்வும்' யார் எழுதியது?
12. டானியலின் சிறுகதைகள் எந்த இதழில் வெளிவந்தன?
13. தமிழ்நாட்டில் அறிவியல் நாவலின் முன்னோடி யார்?
14. குடும்பங்களில் யார் கதை சொல்லும் மரபு பழங்காலத்தில் இருந்தது?
15. தமிழன் இதழை நடத்தியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. சிறுகதை எவ்வாறு அமைய வேண்டும்?
2. சிறுகதை வளர்ச்சிக்குத் தமிழ் இதழ்கள் எவ்விதம் உதவின?
3. கு. அழகர்சாமியின் கதைக் கருக்கள் பற்றிக் கூறுக.
4. ஆர்.சூடாமணியின் சிறுகதைத் தொகுப்புக்களைக் குறிப்பிடுக.
5. சு.சமுத்திரத்தின் படைப்புக்களில் காணும் மனித நேய வெளிப்பாடுகளை விளக்குக.
6. புதின அமைப்புக் குறித்து எழுதுக.
7. தழுவல் புதினங்கள் பற்றிக் குறிப்பு வரைக.
8. தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன்னீலனின் பங்கு பற்றிக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சிறுகதை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) புதுமைப்பித்தனின் சமுதாயப் பார்வை மற்றும் நடை குறித்து விரிவாக எழுதுக.

2. (அ) துப்பறியும் புதினங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கல்கியின் வரலாறு சார்ந்த புதினங்கள் பற்றிக் கட்டுரை வரைக.

3. (அ) ஜெயகாந்தனின் புதினங்கள் பற்றி ஆய்வு செய்க.

(அல்லது)

(ஆ) 'கோபல்லபுரத்து மக்கள்' நாவல் இயற்கையோடு இயைந்த மக்கள் வாழ்வை எவ்வாறு காட்டுகிறது?